பக்கங்கள்: 11

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 20 | புதன்கிழமை | 06.12.2023 | கதிர் 390

# பயங்கரவாதிகள் நினைவுகூரப்படுவது கவலையளிக்கின்றது

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் நாடாளுமன்றில் கருத்து

பயங்கரவாதிகள் நினைவு கூரப்படுவது கவலையளிக்கின்றது என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த தென்னக்கோன் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மாவீரர் தின நிகழ்வில் வடக்கில் கலந்துக்கொண்ட சிறுவர்களுக்கு பயங்கரவாதிகளாக்கிய சம்பவம் மீண்டும் நாட்டில் நடத்திருக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார். ☞ 2

## இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணம் ரில்கோ விடுதியில் கடந்த மாதம் இடம்பெற்ற டிஜே நைட் என்னும் மதுக் கேளிக்கை விருந்து நிகழ்ச்சியைப் போன்ற மற்றொரு நிகழ்வுக்கு அனுமதி கோரப்பட்ட நிலையில் யாழ். மாநகர சபை அதற்கு அனுமதி மறுத்துள்ளது.

நவம்பர் 4 நடந்த இந்த முதல் மது விருந்து நிகழ்வில் பங்கேற்பாளர்கள் போதைப் பொருள் பயன்படுத்தினார்கள் என்கிற குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டன. தெற்கில் இதுபோன்ற நிகழ்வுகள் போதைப் பொருள் பயன்பாட்டுக்காகவே ஒழுங்கு செய்யப்படும் நிலையில் இங்கும் அத்தகைய நிகழ்வுகளுக்கு இதுபோன்ற போதை விருந்துகள் இடமளித்துவிடுமோ என்கிற அக்கறை, கரிசனை வெளிப்படுத்தப்பட்டது. ☞ 2

## நாடாளுமன்றம் வரை நீண்ட சுவஸ்திகா உரை விவகாரம்

சட்டத்தரணி சுவஸ்திகாவை யாழ். பல்கலைக்கழகத்தில் உரையாற்றவிடாமல் தடுத்தமை தொடர்பில் சபையில் இராஜாங்க அமைச்சர் கலாநிதி.சுரேன் ராகவனுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமாருக்கும் இடையில் வாதப்பிரதவாதம் இடம்பெற்றது.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கல்வி, உயர்கல்வி அமைச்சுக்கள் மீதான ☞ 2

## இலங்கை – இந்திய தளபதிகள் புதுடில்லியில் சந்தித்துப் பேச்சு



இலங்கை இராணுவத் தளபதிக்கும் இந்திய இராணுவத் தளபதிக்கும் புதுடில்லியில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டேவின் அழைப்பின் பேரில் புதுடில்லியில் உள்ள இந்திய இராணுவத் தலைமையகத்துக்கு திங்கட்கிழமை சென்றடைந்த இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேவுக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. ☞ 2

## இலங்கை வான் படைக்கு 2 நவீன விமானங்கள்

சீனாவிடம் முன்பதிவு செய்யப்பட்ட 2 நவீன விமானங்கள் நாட்டை வந்தடைந்த நிலையில் நேற்றையதினம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இரத்மலானை விமானப்படை தளத்தில் நேற்று நடைபெற்ற விமானங்களை கையளிக்கும் உத்தியோகபூர்வமான நிகழ்வில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னகோன் மற்றும் சீன மக்கள் குடியரசின் தூதுவர் இகுய் ஜென்ஹோங் ஆகியோர் பிரதம அதிதிகளாக பங்கேற்றனர்.

ஹார்பின் வை-12 வகையான இந்த இரு விமானங்களையும் இலங்கை விமானப் படைக்கு கையளிப்பதற்கான ஆவணங்களில் கையொப்பமிட்டு முறையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில். விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ மற்றும் சீனாவின் தேசிய வானூர்தி தொழில்நுட்ப ☞ 2

## மறியல் போராட்டத்தை நாம் நடத்தவேயில்லை

### கிளிநொச்சி வளாக மாணவர் ஒன்றியம் அறிவிப்பு

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக மாணவர்களின் பெயரால் ஏ9 வீதியை மறித்து கிளிநொச்சியில் நாளை நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்ட போராட்டத்திற்கும் தமக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி வளாக சிங்கள - தமிழ் மாணவர்கள் என்ற பெயரில் அனுப்பப்பட்ட மின்னஞ்சல்கள் அனைத்தும் பொய்யானவை என்றும் யாழ். பல்கலைக்கழகப் பொறியியல் பீட மாணவர் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் நவம்பர் 27 மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெற்றமை தொடர்பாக விரிவுரையாளர்கள், மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறின் வீதி மறியலில் ஈடுபடப்போவதாக பொறியியல் பீட சிங்கள-தமிழ் மாணவர்கள் என்ற பெயரில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் உட்பட பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் பலருக்கு அநாமதேய மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்டிருந்தன. கிளிநொச்சி வளாகத்தில் அமைந்துள்ள பீடங்களின் பீடாதிபதிகள் பதவி விலக்கப்படுவதோடு இந்நிகழ்வுகளில் ஈடுபட்ட மாணவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்றும் அந்தக் கடிதங்களில் வலியுறுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பிலேயே இ யாழ். ☞ 2

## தலதா மாளிகையில் இருந்து நல்லூர் வரை சமாதான செய்தி



சமாதானத்தின் செய்தியை தலதா மாளிகையிலிருந்து நல்லூர் நோக்கி எடுத்து வரும் பயணம் 100 இளைஞர் அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்டது.

சர்வமத தலைவர்களின் ஆதரவுடன் ஜனநாயக இளைஞர் காங்கிரஸ் உள்ளிட்ட 100 இளைஞர்கள் ☞ 2

## பேரவாவி அபிவிருத்தித் திட்டத்தை டிசெ. 15க்குள் சமர்ப்பிக்க பணிப்பு

கொழும்பு, கங்காராம, பேரவாவி அபிவிருத்தித் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கைகளை டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்குமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதானிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் இகொழும்பு நகரை அழகுபடுத்தும் திட்டம் மற்றும் அதன் தற்போதைய முன்னேற்றம் தொடர்பான அறிக்கையை உடனடியாக ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்குமாறும் சம்பந்தப்பட்ட ☞ 2

## நெதர்லாந்து திருப்பித் தந்த பொருள்களின் கண்காட்சி

### நேற்றுத் தொடங்கியது

ஒல்லாந்து காலனித்துவக்காலத்தில் இலங்கையிலிருந்து நெதர்லாந்துக்கு கொண்டுச் செல்லப்பட்டு தற்போது மீளக் கையளிக்கப்பட்டிருக்கும் தொல்லியல் பொருட்களை மக்கள் பார்வைக்காக வைக்கும் நிகழ்வு புத்தசாசன மற்றும் சமய இகலாச்சார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க ஆகியோர் தலைமையில் நேற்று தேசிய அருங்காட்சியகத்தில் நடை ☞ 2

## நீதி அமைச்சரின் கருத்தை மறுக்கிறார் சுமந்திரன் எம்.பி.

தன்னைக் கொல்ல வந்த 5 சந்தேகநபர்களும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று நீதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்த கருத்து முற்றிலும் தவறானது என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

நீதிஇ சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்சஇ நாடாளுமன்றத்தில் டிசெம்பர் 4 திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கைக்கு பதிலளித்த ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் அமைச்சரின் கருத்து தொடர்பில் வருந்துகிறார் என்று தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நீதிமன்றில் நிலுவையில் உள்ள வழக்கு ஒன்று தொடர்பில் நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிடுவது முறையல்ல என்பது நீதி அமைச்சருக்குத் தெரியாததல்ல. மிகக் கீழ்த்தரமான முறையில் அவர் நாடாளுமன்றத்தில் தவறான கருத்துக்களை முன்வைத்ததற்காக நான் மிகவும் வருந்துகிறேன்.

இந்தச் சபையில் உரையாற்றிய நீதி அமைச்சர் இ ☞ 8

## ஆசிரியர், அதிபர் கூட்டமைப்பினர் நாடாளுமன்றம் அருகே ஆர்ப்பாட்டம்

நாடாளுமன்ற சுற்று வட்டத்துக்கு அருகில் ஆசிரியர். அதிபர் தொழிற்சங்க கூட்டமைப்பினர் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஆசிரியர் அதிபர்களின் சம்பள முரண்பாடு உள்ளிட்ட கல்வித்துறையின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்படாமையைக் கண்டித்து நேற்றுக் காலையில் நாடாளுமன்ற சுற்றுவட்டத்துக்கு அருகில் ஒன்றுகூடியவர்கள் பின்னர் கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

சற்று நேரத்தில் எதிர்ப்பில் ஈடுபட்டவர்கள் பேரணியாக நாடாளுமன்றம் நோக்கிச் செல்வதற்கு முயற்சித்தனர். எனினும் அங்கு குவிக்கப்பட்டிருந்த பொலிஸாரும் கலகத் தடுப்புப் பிரிவினரும் அவர்களை தடுத்தனர். பின்னர் அவர்கள் நாடாளுமன்ற சுற்று வட்டத்தில் எதிர்ப்பில் ஈடுபட்டு கலைந்து சென்றனர்.

முன்னதாக ஆசிரியர், அதிபர் தொழிற்சங்க கூட்டமைப்பின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இ இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் பிரதம ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நடந்துமுடிந்தபோதைவிருந்தில்18 வயதுக்குக்குறைந்த சிறுவர்களும் கலந்துகொண்டிருந்தனர் என்பது மேலும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. அவை பற்றியெல்லாம்நான்இந்தப்பத்தியில் முன்னர் குறிப்பிட்டிருக்கின்றேன். அதற்கு ரில்கோ ஹோட்டல் உரிமையாளர் விடுத்த பதில் அறிக்கையையும் அப்படியே தந்திருக்கின்றேன். அந்த அறிக்கையில் இளைஞர்கள் மது அருந்துவதை நியாயப்படுத்தும் வகையில் உரிமையாளர் திலகராஜ் தெரிவித்திருந்ததையும் கண்டித்திருக்கின்றேன்.

இப்போது அப்படிப்பட்டதொரு நிகழ்வுக்கு மீண்டும் அனுமதி கோரப்பட்டிருக்கின்றது. நவம்பர் 4 நிகழ்வுகள் சர்ச்சைக்குள்ளான நிலையில்இ அதுவும் தனது கண்காணிப்பில் நடந்த நிகழ்வில் சர்ச்சை ஏற்பட்டதை அடுத்து எச்சரிக்கை அடைந்த யாழ்ப்பாண மாநகர சபைஇ இம்முறை இந்த நிகழ்வினை அனுமதிக்கவே முடியாது என மறுத்துவிட்டது. இது தொடர்பாக யாழ் மாநகர சபையின் ஆணையாளர் ஒப்பமிட்ட கடிதம் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கும் ஹோட்டல் உரிமையாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

..................

ஷானிஅபேசேகரவை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் செலவாக்கு மிக்க அதிகாரியாக வலம் வந்தவர். திறமையான விசாரணையாளர் என்று அடையாளப்படுத்தப்பட்டவர். 2015 ரணில் - மைத்திரி கூட்டு ஆட்சியில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஊழல் விசாரணைகள் பலவற்றைத் துணிச்சலுடன் மேற்கொண்டவர். பலவழக்குகளில்ராஜபக்ஷக்களிடம் வாக்குமூலத்தைப் பதிவு செய்து அவர்களைக் கைது செய்ததில் ஷானியின் பங்களிப்பு அதிகம் இருந்தது.

ஆனால்இ எல்லாம் ஒரு 4 வருடங்களுக்குத்தான். 2019 கோட்டாபய பதவிக்கு வந்ததும் எல்லாம் தலைகீழாக மாறின. ராஜபக் ஷக்களை வேட்டையாடிய ஷானிவேட்டையாடப்பட்டார். அவர் நாட்டைவிட்டேதப்பியோடவேண்டி ஏற்பட்டது. 2022நிலமைதலைகீழாக மாறி கோட்டாபய நாட்டைவிட்டு ஓடவேண்டி ஏற்பட்டது. பின்னர் ஷானிஇ கோட்டா இருவருமே நாட்டுக்குத் திரும்பி வந்தனர். ஆனாலும்பிரச்சினைகள் முடிவுக்கு வரவில்லை.

இப்போதுஇஷானிஅபேசேகரவை விபத்தை ஏற்படுத்திக் கொல்லும் சதித் திட்டங்கள் இருப்பதாக சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார். டிசெம்பர் 4 மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்ட மா அதிபரால் இந்தத் தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

உயிருக்குஅச்சுறுத்தல்இருப்பதால் தமக்கு போதிய பாதுகாப்பை வழங்குமாறு பொலிஸ் மா அதிபர் மற்றும் பிரதிவாதிகளுக்கு உத்தரவிடுமாறு கோரி ஷானி அபேசேகர தாக்கல் செய்த ரிட் மனு மீதான விசாரணையின் போதே சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ரொஹந்த அபேசூரிய இதனைத் தெரிவித்தார்.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்கபந்துலகருணாரத்னமற்றும் விக்கும் களுஆராச்சி ஆகியோர் முன்னிலையில் விசாரிக்கப்பட்டது.

ஷானி அபேசேகரவுக்கு எதிரான அச்சுறுத்தல்களின் தன்மை குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள்பாதுகாப்புஅதிகாரசபைக்கு நீதிமன்றம் முன்னர் உத்தரவு பிறப்பித்திருந்தது.

**ஷானிஅபேசேகரவுக்குகடுமை யான அச்சுறுத்தல்**

இது தொடர்பான மனு இன்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதுஇ மனுதாரர் ஷானி அபேசேகரவுக்கு எதிரான அச்சுறுத்தல்களின் தன்மையை வெளிப்படுத்தும் அறிக்கை பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பாதுகாப்பு அதிகாரசபையின் புலனாய்வுப் பிரிவினரிடம் உள்ளதாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ரொஹந்த அபேசூரிய நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த அறிக்கையின்படி மனுதாரர் ஷானிஅபேசேகரவுக்குகடுமையான அச்சுறுத்தல் இருப்பதாகவும்இ அவர் பயணம் செய்யும் போது கார் விபத்தில் அவரைக் கொல்ல சதி இருப்பதாகவும்தெரியவந்துள்ளதாக கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

மனுதாரர் ஷானி அபேசேகர சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணிஉபுல்ஜயசூரியஇதனது கட்சிக்காரருக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பில்திருப்திஅடையமுடியாது என நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் பாதுகாப்பிற்காக பழைய மோட்டார் சைக்கிள் மற்றும் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் மாத்திரமே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டியஜனாதிபதிசட்டத்தரணி உபுல் ஜயசூரியஇ மனுதாரருக்கு போதிய பாதுகாப்பை வழங்குமாறு பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பாதுகாப்பு அதிகாரசபை பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவு பிறப்பித்துள்ள போதிலும்இ அது இதுவரைநிறைவேற்றப்படவில்லை என்பதையும் விளக்கினார்.

முன்வைக்கப்பட்ட அனைத்து உண்மைகளையும் பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பெஞ்ச்இ இந்த மனு தொடர்பாக உரிய உத்தரவை பிறப்பிக்க வரும் 14ம் தேதி கூட்டப்படும் என உத்தரவிட்டது.

மேல்மாகாணத்திற்குபொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராகஇருந்தவரும்தற்போதைய பதில் பொலிஸ் மா அதிபருமான தேஷபந்து தென்னகோன்இ பாதிக்கப்பட்டவர்கள்மற்றும்சாட்சிகள் பாதுகாப்பு அதிகாரசபை ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## பயங்கரவாதிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இதனை கூறினார். மாவீரர் நாள் நிகழ்வுகள் வடக்கு கிழக்கில் இடம்பெற்றமை குறித்தே அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். மக்களின் நினைவுகூரும் உரிமையைத் தடுக்க முடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூ-றிவரும் நிலையில்இ அவரது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அதற்கெதிரான கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் கடந்த நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தின நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துக்கொண்ட சிறுவர்கள் சிலர் விடுதலை புலிகள் அமைப்பினரின் ஆடைகளை போல் ஆடை அணிந்திருந்தனர்.

சிறுவர்களின் கழுத்தில் சைனட் குப்பிக்கு ஒப்பான பொருளையும் அணிவித்துஇகுறித்தசிறுவர்களைப் பயங்கரவாதிகளாக்கி இருந்தனர்.

இவ்வாறானதொரு சம்பவம் மீண்டும் நாட்டில் இடம்பெற்றிருக்கக்கூடாது. போர்க் காலத்தில் விடுதலை புலிகள் அமைப்பினரே சிறுவர்களை போரில் இணைத்துக்கொண்டனர்.

மூன்றுதசாப்தபோரில்நாம்இன்னும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை. அதனாலேயே சிறுவர்கள் பயங்கரவாதிகளாக சித்தரிக்கப்பட்டு பயங்கரவாதிகள் நினைவுகூரப்படுகின்றனர். இந்த சம்பவம் மிகவும் கவலையளிக்கிறது' எனத் தெரிவித்தார்.

## நாடாளுமன்றம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவாவதத்தின் போதே அவர்கள் இருவருக்கும் குறித்த வாதப்பிரதவாதம் ஏற்பட்டது.

நாடாளுமன்ற உறுப் பினர் கஜேந்திரகுமார் உரையாற்றிக்கொண்டிருந்தபோதுஇ இடைமறித்த உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன்இ யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்திலே சட்டத்தரணி சுவஸ்திகா உரையாற்றவிடாது தடுக்கப்பட்டார். உண்மையிலே அங்கே இருப்பவர்கள்தான் தடுக்கிறார்களே தவிரஇ இது வெளித்தரப்பாலோ இராணுவத்தாலோ சொல்லப்பட்ட விடயம் அல்ல என்னும் விடயத்தை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என்று குறிப்பிட்டிருந்தார்.

அதற்குப் பதிலளித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்இ தனிப்பட்ட முறையில் அந்த அம்மையார் தனது கருத்தைப் பதிவு செய்வதை நான் எதிர்ப்பவன் அல்லன். அவரை உரையாற்ற அனுமதித்திருக்க வேண்டும் என்பதுதான் எனது தனிப்பட்ட கருத்தாகும். ஆனால் - அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததற்கான நியாயம் உள்ளது. அந்த அம்மையாருடைய அரசியல் கருத்துக்களுக்கு நேர் மாறான கருத்தை அந்த பல்கலைக்கழகத்திலோஅல்லதுஇந்த நாட்டில் இருக்கக் கூடிய எந்தவொரு பல்கலைக்கழகங்களிலோ போய் சொல்ல முடியாது.

அந்த அம்மையார் சொல்லும் கருத்தை எல்லா இடத்திலும் போய் சொல்லமுடியும். அதற்குஒருதடையும் விதிக்காமல் வரவேற்பார்கள். ஆனால் இந்தக் கருத்துக்கு நேர்மாறான கருத்துதான் மிகப் பெரும் பெரும்பான்மையினரின் கருத்தாக வடக்குஇ கிழக்கில் இருக்கத்தக்கதாகஇ சுவஸ்திகா போன்றோரின் கருத்தை திணிப்பதற்கு பார்க்கிறார்களே தவிரஇ அதற்கு நேர் மாறான கருத்தை எந்தவொரு இடத்திலும் - குறிப்பாக வடக்கு கிழக்கிலும் சரி அதற்கு வெளியிலும் இருக்கும் பல்கலைக்கழகங்களிலும் சரி கதைக்க முடியாது.

ஆகவேஇ இதனைத்தான் நான் சொல்லுகின்றேன். இந்த சிந்தனை சுதந்திரத்தை எந்தவொரு தடையும்விதிக்காமல்முழுமையாக அமுல்படுத்த வேண்டும். அதை செய்யாமல் வெறுமனே ஒரே ஒரு கருத்தை மட்டும் திணிக்க முயல்வதை ஏற்கமுடியாது என்றார்.

## ஆசிரியர், ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் மஹிந்த ஜயசிங்க ஆகியோருக்கு எதிராக நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில்இ குறித்த தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் அமைதியான முறையில் எதிர்ப்பில் ஈடுபடுவதற்கும் கருத்துகளை வெளியிடுவதற்கான சுதந்திரத்திற்கும் இடையூறு ஏற்படுத்தப்படாது என்று நீதிவான் குறிப்பிட்டிருந்தார்.

## மறியல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகப் பொறியியல் பீட மாணவர் ஒன்றியம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நண்பகல் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவருக்குக் கடிதமொன்றினை அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் உட்படப் பலருக்கு முறைப்பாட்டுக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக அறிகின்றோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொறியியல் பீட மாணவர்களுக்கென ஒரேயொரு மாணவர் அமைப்பாக எமது அமைப்பே இயங்கி வருகிறது. எமது பீட மாணவர்களுக்கென வேறெந்த அமைப்பும் கிடையாது.

டிசெம்பர் 7 நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள போராட்டங்களுக்கும் எமக்கும் எவ்வித மான தொடர்புகளும் கிடையாது என்பதோடுஇ எமது மாணவர்கள் எந்தப்போராட்டத்திலும்கலந்துகொள்ளமாட்டார்கள் என்றுள்ளது.

## பேரவாவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவன பிரதானிக ளுக்கு சாகல ரத்நாயக்க அறிவித்தார்.

கொழும்புநகரை அழகுபடுத்தும் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் பேர வாவி அபிவிருத்தித் திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு தொடர்பில் நேற்று (04) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே சாகல ரத்நாயக்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

பேர வாவியை அண்டியதாக பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அபிவிருத்தி செய்து பயன்படுத்தக் கூடியஇ அடையாளம் காணப்பட்ட காணிகளின் அபிவிருத்தி மற்றும் தனியார் பங்கேற்புடன் பேர வாவியை அபிவிருத்தி செய்தல் உட்பட பேர வாவிக்கு திருப்பிவிடப்படும்கழிவுநீர் குழாய்களைத்தடுத்தல் மற்றும் வாவியில் உள்ள பாக்டீரியா மற்றும் பாசிகளின் அளவை குறைத்தல் உள்ளிட்ட திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.

மூன்றுஇடங்களில்அமைந்துள்ள மத்திய பேருந்து நிலையம் மற்றும் புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள பேருந்து நிலையம் அமைந்துள்ள காணியை தனியார் துறையினருடன் இணைந்து வர்த்தக செயற்பாடுகளுக்காக அபிவிருத்தி செய்தல்இ கொழும்பு நகரிலுள்ள பாதுகாப்பற்ற மரங்களை அகற்றிஇ பொருத்தமான மரங்களை நடல்இ கொழும்பு நகரில் உள்ள கைவிடப்பட்டுஇ காடாக மாறியுள்ள கட்டிடங்களை அடையாளம் கண்டு பராமரித்தல்இ கொழும்பு நகர போக்குவரத்துஇ பயணிகளை ஏற்றிச் செல்வது மற்றும் இறக்குவது தொடர்பான ஒழுங்குமுறைத் திட்டத்தைத் தயாரித்தல்இ மழைநீர் முறையாக வடிந்து செல்வதற்கு முன்னெடுத்து வரும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் எதிர்வரும் கிறிஸ்துமஸ் பண்டிகைக் காலத்தில் கொழும்பில் ஏற்படும் நெரிசலைக் குறைப்பதற்கும்இ முகாமைத்துவம் செய்வதற்கும் இலங்கை பொலிஸ்இ கொழும்பு மாநகர சபை மற்றும் வர்த்தக சங்கங்கள் இணைந்து வேலைத்திட்டம்ஒன்றைத்தயாரிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

கொழும்பு மாநகர சபைஇ நகர அபிவிருத்தி அதிகார சபைஇ வீதி அபிவிருத்தி அதிகார சபைஇ இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பொலிஸ் ஆகிய நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி சிரேஷ்ட அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் பங்கெடுத்திருந்தனர்

## இலங்கை - ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனையடுத்து இலங்கை இராணுவத் தளபதி தேசிய போர் வீரர்களின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பின்னர் இந்திய இராணுவப் படையணியினர் சம்பிரதாய அணிவகுப்பு மரியாதை செலுத்தப்பட்டது.

தொடர்ந்து இந்திய இராணுவ தலைமையகத்தில்உள்ளஅலுவலகத்தில்இ இராணுவத் தளபதிஇ இந்திய இராணுவத்தின் இராணுவத்தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டேவுடன் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் போதுஇ இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்புஇ பயிற்சி தொகுதிகளை மேம்படுத்துதல்இ பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் இரு படைகளுக்கு இடையிலான நட்புறவு தொடர்பான விஷயங்கள்பரிசீலனைக்குஎடுத்துக் கொள்ளப்பட்டன.

இந்திய ஊடகங்களின் தகவல்களின் படி இந்திய இராணுவத் தளபதி மனோஜ்பாண்டேஇலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியானகேவுடன் பரந்த அளவிலான பேச்சுக்களை நடத்தினார்.

பிராந்தியத்தில் சீனாவின் அதிகரித்துவரும்இராணுவஉறுதிப்பாட்டின் பின்னணியில் இருதரப்பு இராணுவஈடுபாட்டைஅதிகரிப்பதில் கவனம் செலுத்தினார்.

இலங்கை இராணுவத்தளபதியின் இந்திய விஜயம் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால உறவுக்கு ஒரு 'சாட்சியம' என்று இந்திய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இரு படைகளுக்கும் இடையே இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது உட்பட பல்வேறு சமகால பிரச்சினைகள் குறித்து யோசனைகளை பரிமாறிக் கொண்டனர் அத்துடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை நடத்தியதோடுஇ பாதுகாப்புச் செயலாளர் கிரிதர் அர்மானேஇ ஏயர்.சீப் மார்ஷல் வி.ஆர். சௌதாரிமற்றும்கடற்படைத் துணைத்தலைவர்வைஸ்அட்மிரல் சஞ்சய்ஜஸ்ஜித்சிங்ஆகியோருடனும் உரையாடினார்.

பின்னர் இலங்கை இராணுவத் தளபதிஇ பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் அனில் சௌஹானையும் சந்திக்கவுள்ளதோடு இந்த சந்திப்புகள் மற்றும் இருதரப்பு விவாதங்கள் இரு நாடுகளுக்கும் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கானபகிரப்பட்ட இலக்குகளை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

இரண்டு நட்பு அண்டை நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர மற்றும் இராணுவ உறவுகளை வலுப்படுத்துவதில் இந்த விஜயம் ஒரு முக்கியமான மைல்கல்லைக் குறிக்கிறது. இது பல ஆண்டுகளாக வளர்ந்து வரும் நீடித்த நட்புறவை வலுப்படுத்துகிறதுஇ பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புத் துறைகளில் ஒத்துழைப்பையும் பரஸ்பர புரிதலையும் மேம்படுத்துகிறதுஇ

உத்தியோகபூர்வ விஜயத்தின் முதன்மை நோக்கமானது இரு நாட்டுப் படைகள் மற்றும் நாடுகளுக்கு இடையே உள்ள பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் நட்பின் பிணைப்புகளை மேலும் மேம்படுத்துவதாகும்.

இருதரப்பு பாதுகாப்பு ஈடுபாடுகளை தீவிரப்படுத்துவது மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புகளை ஆராய்வதும் இதன் நோக்கமாகும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை வான் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒத்துழைப்பைச் சேர்ந்த டென்லிங் ஆகியோர் உத்தியோகபூர்வ ஒப்படைப்பைக்கும் தருணத்திற்கு தலைமை தாங்கினர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய விமானப்படைத்தளபதிஇபூலோபாய பங்காளித்துவத்திற்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இலங்கை விமானப்படையின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதில் குறித்த விமானங்கள் சர்வதேச ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவதற்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்பை அவர் வலியுறுத்தினார்.

## தலதா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புக்கள் கண்டி தலதா மாளிகை தொடக்கம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வரை உள்ள சர்வமத தலைவர்களுக்கு சமாதானத்தின் செய்தியை எடுத்து வந்தனர். திங்கட்கிழமை கண்டி தலதா மாளிகை மற்றும் கண்டி சிறீ நாட்ட தேவாலத்திற்கருகாமையில் இந்த செயற்திட்டத்தை ஆரம்பித்த இளைஞர்கள் நேற்று பிற்பகல் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை வந்தடைந்தனர்.

அன்பிற்கும் நட்புக்குமான வலையமைப்பின் ஏற்பாட்டில் இந்த வேலைத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நெதர்லாந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது.

நெதர்லாந்தின் பிரசித்தமான சுதைமள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்தஇ தங்கத்தால் தயாரிக்கப்பட்ட உறையுடன் கூடிய வாள் வெள்ளியினால் செய்யப்பட்ட உறையுடன்கூடியவாள்இதங்கத்தால்செய்யப்பட்டகத்திஇதுப்பாக்கிகள் இரண்டு(சுவர்துப்பாக்கிகள்)லெவ்கே பிரிவுக்கு சொந்தமானதென கருதப்படும் பீரங்கிஇ உள்ளிட்ட 06 தொல்பொருட்களும் 1765

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினால் டெங்கு விழிப்புணர்வு கருத்தமர்வு







சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 பி1 இன் மாவட்ட ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம் பீற்றர் அவர்களால் டிசெம்;பர் மாதம் 4 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதி டெங்கு விழிப்புணர்வு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் அதன் இரண்டாம் நாளான நேற்று (செவ்வாய்க்கிழமை) சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்களுக்கு டெங்குநோ-யிலிருந்து எம்மை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அஜந்தன் நிகழ்த்தினார்.

இந்தநிகழ்வில்கல்லூரிமுதல்வரும் சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினருமான லயன் மு.செல்வஸ்தான்,மாவட்ட ஆளுநரின் ஆலோசகரும் சுன்னாகம் லயன்ஸ் கழக செயலாளருமான லயன் சி.ஹரிகரன், சுன்னாகம் லயன்ஸ்கழக உறுப்பினர்களான - பிராந்தியத் தலைவர் லயன் பா.மரியதாஸ், வலயத் தலைவர் லயன் க.டினேஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்த திங்கட்கிழமை சுன்னாகம் மயிலணி மகாவித்தியாலயத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இன்று (புதன் கிழமை) உடுவில் மகளிர் கல்லூரியில் நடத்த ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது. (05)

# யொஹானிக்கு வீடு கொடுத்த ஆட்சியாளர்கள் அகிலத்திருநாயகியை ஏன் கவனிக்கவில்லை?



பாடகி யொஹாணிக்கு வீடு கொடுத்த இந்த ஆட்சியாளர்கள் பிலிப்பைன்ஸில் நடைபெற்ற போட்டியில் 2 தங்கப் பதக்கங்களை வென்ற 71 வயதான அகிலத்திருநாயகியை ஏன் கண்டுகொள்ளவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

மட்டக்களப்பு மாவட்டத்தில் விளையாட்டில் திறமையானவர்கள் பலர் உள்ளனர்.

எனவே கிரிகெட், காற்பந்து, வலைப்பந்து போன்ற அனைத்து விளையாட்டுகளுக்குமான மைதானங்களை புனரமைப்பு செய்வதற்கு நிதி தேவைப்படுகின்றது. இந்தத் தேவையை பிரதேச, தொகுதி மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழு மூலம் செயற்படுத்த முடிந்த போதிலும்இவைதிறமையுள்ளவர்களுக்குச் சென்றடையாமல் அரசியல்வாதிகளுடன்நட்புடன்இருப்பவர்களையே சென்றடைவதைக் காணக்கூடியதாக உள்ளது. எனவே, திறமையானவர்களை இனங்காண்பதற்கு நாங்களும் உதவுகின்றோம். அவர்களை இனங்கண்டு அவர்களுடைய திறமைகளை விருத்தி செய்வதற்குரிய முயற்சிகள் நிச்சயமாக எடுக்கப்பட வேண்டும்.

பாடகியொஹாணிக்குகொழும்பில் வீடொன்றைஅமைத்துக்கொடுத்துள்ள அரசாங்கம் பிலிப்பைன்ஸ் சென்று நாட்டுக்கு 2 தங்கப் பதக்கங்களை வென்றுகொடுத்த 71 வயதான முல்லைத்தீவைச் சேர்ந்த அகிலத்திருநாயகிக்குச்செய்யப்போவதுஎன்ன?

அதுமட்டுமல்லாது கொழும்பைச் சேர்ந்த சண்முகநாதன் என்பவர் 19 வயதுக்குக்கீழ்ப்பட்ட கிரிக்கட் குழுவில் தெரிவாகியுள்ளார். இவர் மேலும் முன்னேறிச் செல்லத் தேவையான வசதிகளை மேற்கொள்ளும் படியும் கேட்டுக் கொள்கின்றேன். இவர் கொழும்பை சேர்ந்தவர் ஆகினும் தமிழர் என்னும் அடிப்படையில் புறக்கணிக்காது அவருக்கான இடம் வழங்கப்பட வேண்டும். வடக்குக் கிழக்கை சேர்ந்த பல திறமையானவர்கள் காலம் காலமாக ஒதுக்கப்பட்டு வருகின்றார்கள். இனி-வரும் காலங்களில் அவர்களுக்கான களம் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். மற்றும் செல்வசேகரன் ரிஷிதன் எனும் இளைஞன் 6 விதமான பந்து வீசும் திறமையுடைய-வராக அறிமுகம் செய்யப்பட்டுள்ளார். இவரை 'முத்தையா' எனவும் அழைக்கின்றனர். மேலும் இவர் 4 ஓவர் இல் எந்தவித ஓட்டங்களும் எடுக்கப்படாமல் 8 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ளமை ஒரு பெரிய சாதனையாகும். இவர்களைப் போன்ற எமது நாட்டின் பொக்கி-ங்களை உள்வாங்கி இவர்களுக்குத் தேவையான உதவிகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# தாக்கப்பட்ட சிறுவனுக்கு சத்திரசிகிச்சை ஆசிரியை தாக்கினார் என குற்றச்சாட்டு

யாழில் ஆசிரியையின் தாக்குதலுக்கு இலக்கானார் என்று குற்றஞ்சாட்டப்படும் 4 ஆம் தர மாணவனின் நகம் சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த மாணவன் அப்பியாச கொப்பியில் ஒழுங்காக எழுதவில்லை என ஆசிரியை, மாணவனின் கையில் அடித்துள்ள நிலையிலேயே மாணவனின் விரல் நகம் சிதைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவரதுநகம்சத்திர சிகிச்சைமூலம்அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில்அம்மாணவனின்பெற்றோர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# தாய்ப்பால் புரைக்கேறியதில் யாழில் குழந்தை உயிரிழப்பு

பிறந்து, 26 நாள்களேயான, குழந்தையொன்று தாய்ப்பால் புரைக்கேறி உயிரிழந்த சம்பவம் யாழில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கொடிகாமம், மிருசுவிலைச் சேர்ந்த ஆண் குழந்தையொன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இந்நிலையில் 'தாய் பால் குடிக்கும் போது, பால் புரைக்கேறி,சுவாச குழாய்க்குள் சென்றமையாலேயே குறித்த மரணம் சம்பவித்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள் ளது. (05)



# பாலியல் கல்வி மாணவருக்கு அவசியம்

## ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் பற்றிய தரவுகளை முன்வைப்பதால் மாத்திரம் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

எனவே பாலியல் கல்வி முறைமையை அறிமுகம் செய்தால் மட்டுமே சிறந்த மாற்றத்தை எதிர்பார்க்கலாம் என ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் -

பாலியல் கல்வி மற்றும் உறவுநிலைகளின்முக்கியத்து-வம் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய சூழலில் பாலியல் தொடர்பான அறிவு அல்லது தெளிவூட்டும் மாணவர்கள் மத்தியில் குறைவாக இருப்பதாகவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் சுட்டிக்காட்டியிருந்தார்.

மேலும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரித்துள்ள நிலையில் இந்த விடயங்கள் குறித்தும் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் கேட்டுக்கொண்டுள்ளார். (05)

# பெப்ரவரி 19 ஆம் திகதிக்கு முன்னர் பாடப்புத்தகங்களை வழங்குவோம்

## கல்வி அமைச்சர் சுசில் தகவல்



அடுத்த வருடம் பெப்ரவரி 19 ஆம் திகதிக்கு முன்னர் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் வழங்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த் அறிவித்துள்ளார்.

நாடளுமன்றில் வரவு செலவுத் திட்டத்தில் கல்வி அமைச்சின் செலவீனங்கள் மீதான குழு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் பின்தங்கிய நிலையில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான பாதணி வவுச்சர்கள்வழங்குவதற்கு 2200 மில்லியன்ரூபா செலவிடப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி 7,47,093 மாணவர்களுக்கு பாதணி வவுச்சர்கள் வழங்கப்படும் என்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த் அறிவித்துள்ளார். (05)

# 17 ஆயிரத்து 95 மனித நாள்கள் வேலைநிறுத்தங்களால் இழப்பு

2022ஆம்ஆண்டில்தொழில்பிரச்சினைகள்வேலைநிறுத்தமாக அதிகரித்ததன் காரணமாக பதினேழாயிரத்து தொண்ணூ-ற்றைந்து (17,095) மனித நாள்கள் இழக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் துறையின் செயல்திறன் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஆண்டில், 22 வேலைநிறுத்தங்கள் பதிவு செய்-யப்பட்டன. அவற்றில் 5 ஆயிரத்து 558 தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

மேலும், மாவட்ட மற்றும் துணைத் தொழிலாளர் அலுவலகங்களின் தொழிலாளர் அலுவலர்கள் 79,700 தொழிலாளர் ஆய்வுகளையும், பெண்களின் இரவுப் பணி தொடர்பான பணி நிலைமைகள் குறித்து 193 ஆய்வுகளையும், குழந்தைத் தொழிலாளர் குறித்து 193 ஆய்வுகளையும் கடந்த ஆண்டு தொழிலாளர் துறை நடத்தியது. தொழில்துறை பாதுகாப்பு பிரிவு 4,600 தொழிற்சாலை ஆய்வுகள் மற்றும் விபத்து விசாரணைகளை நடத்தியது மற்றும் தொழில்சார் பாதுகாப்பு பிரிவு 1,583 உயிரியல் ஆய்வுகள் மற்றும் தொழில்துறை ஆய்வுகளை நடத்தியதன் பின் இந்தத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. (05)

# போதை மாதிரிகளெனப் பொலிஸ் சோதனைக்கு அனுப்பிய 790களில் மாதிரிகளில் கோதுமைமா, பரசிட்டமோல் பவுடர்

*இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி வரை பொலி-ஸாரால் சோதனைக்கு அனுப்பப்பட்ட 790 மாதிரிகளில் கோதுமை மா அல்லது பரசிட்டமோல் பவுடர் இருந்தன என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.*

*இந்த ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் 8 ஆம் திகதிவரை ஹெரோயின் என சந்தேகிக்கப்பட்டு பொலிஸாரால் அனுப்பப்பட்ட 7,351 மாதிரிகளில் 9.5 சதவீத மாதிரிகளில் போதைப்பொருள் இல்லையென்று அவர் கூறினார். ஹெரோயின் போதைப் பொருள் இல்லை எனக் கூறப்படும் பெரும்பாலான மாதிரிகள் வெல்லம்பிட்டிய பொலிஸாரால் அனுப்பி வைக்கப்பட்டன எனவும் அந்த பொலிஸ் நிலையத்திலிருந்து 67 மாதிரிகள் கிடைத்திருந்தன எனவும் தெரிய வந்துள்ளது.*

*கடுவெல பொலிஸ் நிலையத்திலிருந்து 40 மாதிரிகள், மருதானை பொலிஸ் நிலையத்தில் 35, பேலியகொட பொலிஸ் நிலையத்தில் 28, மோதர பொலிஸிலிருந்து 24 மாதிரிகளும் அனுப்பப்பட்டுள்ளன.*

*இந்தப் பொலிஸ் நிலையங் களிலிருந்து போதைப்பொருள் எதுவும் இல்லாத மாதிரிகளும் அனுப்பப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் கூறினார். (05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நீண்ட காலம் பேசப்பட்டாலும் நடவடிக்கை ஏதும் இல்லை

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை இரத்து செய்யுமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியிருக்கிறார்.

கல்வி அமைச்சின் வரவு – செலவுத் திட்டம் மீதான நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

“உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளைப் போன்று ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை இல்லாதொழிக்கப்படவேண்டும்.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் தரம் 8 வரை தவணைப் பரீட்சை கூட நடத்தப்படுவது இல்லை நான் ஜனாதிபதியாக பதவிவகித்த காலத்திலும் புலமைப்பரிசில்பரீட்சையை இரத்துச்செய்வதற்கு முயற்சித்தேன்.

மேலும்இ புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாத போதுஇ மாணவர்கள் சில பெற்றோரினால் துன்புறுத்தப்படுகின்றனர். இது தவிர்க்கப்படவேண்டும்” என்றுதெரிவித்திருக்கிறார் அவர்.

புலமைப் பரிசில் பரீட்சையை நிக்கவேண்டும் என்பது இன்று நேற்றல்ல பல ஆண்டுகளாகவே பேசப்பட்டு வருகின்றது. வறிய மாணவர்களின் கல்வி ஊக்கத் தொகைக்காகத் தொடங்கப்பட்ட புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களுக்கு அழுத்தம் தரும் ஒரு மோசமான பரீட்சையாகத் தடம் மாறி நீண்ட காலமாகிவிட்டது.

அது மாணவர்களுக்கு அழுத்தம் தரும் ஒரு பரீட்சையாக மாறிவிட்டது. புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெறுவதென்பது சமூக மதிப்பிற்குரிய ஒன்றாக மாறியதன் விளைவாகஇ பெற்றோர் தமது பிள்ளைகள் மீது இந்தப் பரீட்சை தொடர்பாக அதிக அழுத்தங்களைச் சுமத்துகின்றனர். இது மாணவர்களை உளவியல் ரீதியாகப் பெரிதும் பாதிக்கின்றது.

இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு இந்தப் பரீட்சையை இல்லாதொழிக்க வேண்டும் என்ற கருத்துநீண்டபலவருடங்களாகவலியுறுத்தப்பட்டு வருகின்றது. ஆனாலும்செயற்படுத்தப்படவில்லை. கல்வியைமகிழ்ச்சிக்குரியகற்றல்நடவடிக்கையாக அன்றிஇ மன அழுத்தத்துக்கு உள்ளாக்கும் செயல்முறையாக மாற்றியமைக்கும் இதுபோன்ற பரீட்சைகள்நிறுத்தப்பட்டுஇவறியமாணவர்களுக்கு அரச உதவி கிட்டுவதற்கான மாற்று வழிகள் ஆராயப்படவேண்டும்.

நிரந்தரமான புதிய கல்விச் சீர்திருத்தத்தைக் கொண்டுவரப்போவதாக கல்வி அமைச்சர் அறிவித்திருக்கும் நிலையில்இ புலமைப் பரிசில் பரீட்சையையும் நிறுத்தும் வகையில் அந்தச் சீர்திருத்தம் அமையவேண்டும். இன்று புலமைப் பரிசில் பரீட்சை இடை நிலைப் பாடசாலை அனுமதிக்கான நுழைவுப் பரீட்சையாகவும் மாறிவிட்டிருக்கின்றது. பிரபலபாடசாலைகளுக்கு அனுமதி பெறவேண்டுமானால் புலமைப் பரிசில் பரீட்சையில் அதியுயர் புள்ளிகளைப் பெற்றிருப்பது கட்டாயமாகி இருக்கின்றது. எனவே அதற்கான மாற்று வழிகளையும் தேடவேண்டியிருக்கும்.

எத்தகைய சவால்கள் இருந்தபோதும் சிறுவர்களுக்கு மன அழுத்தத்தைத் தரும் புலமைப் பரிசில் பரீட்சை போன்றவகைள் நிறுத்தப்படவேண்டியவையே.




## சோதனை விலங்குகளுக்கு விடுதலை

கு.கணேசன்

நாம்உட்கொள்ளும்ஒவ்வொரு நவீன மருந்தும் பலகட்ட ஆய்வுகளைத் தாண்டித்தான் நம் கைக்கு வருகிறது. புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டதும், அது மனித குலத்துக்குப் பயன்படுமா, பாதுகாப்பானதா, பக்க விளைவுகள் உண்டா என்பனவற்றை அறிய, முதலில் விலங்குகளுக்கு அதைக் கொடுத்துப் பார்த்து, முடிவுகள் திருப்தியாக இருந்தால் மட்டுமே மனிதப்பயன்பாட்டுக்குவரும். இதுதான் இந்தியாவில் இந்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பு (DCGI) இதுவரைசெயல்படுத்திவந்த நடைமுறை.

தற்போது அதில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தஆண்டின் ஆரம்பத்தில் ‘புதிய மருந்துகள் - மருத்துவ முன் ஆய்வுகள் - 2023’ (New Drugs and Clinical Trial Rules, 2023) சட்டத்தில் மத்திய அரசு ஒரு திருத்தம் கொண்டுவந்தது. அதன்படி, ‘இனிமேல் புதிய மருந்து எதையும் விலங்குகளிடம் பரிசோதிக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக, உயிரினங்கள் இல்லாத நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும்’ என்று அறிவுறுத்தியுள்ளது.

### விலங்குகள் மூலம் ஆய்வுகள்

உலகில் பொ.ஆ.மு. (கி.மு.) 500க்கு முன்பிருந்தே மருத்துவ ஆய்வுக்கு விலங்குகள் பயன்படுத்தப்பட்டுவருகின்றன. இரண்டாம் நூற்றாண்டில், இத்தாலியில் கேலன் (Galen) என்பவர் முதன்முதலில் பன்றிகளிடம் ஆய்வுசெய்து ரத்தக்குழாய்களைக் கண்டுபிடித்தது வரலாறு ஆனது. இந்தியாவில் இம்மாதிரியான ஆய்வுகள் 1860இல் தொடங்கப்பட்டன. ஆனால், ஆரம்பித்ததில் இருந்தே உலக அளவில் இதற்கு எதிர்ப்பு இருக்கிறது. இந்தியாவில்விலங்கு நலம் சார்ந்த அமைப்பான ‘பீட்டா’ (People for the Ethical Treatment of Animals) விலங்குகளைத் துன்புறுத்தும் இந்த ஆய்வுகளைக் கடுமையாக எதிர்க்கிறது. உலக நாடுகளைப் பின்பற்றி, 2013இல் புதிய அழகுசாதனப் பொருள்களைத் தயாரிக்க விலங்குகளிடம் ஆய்வு செய்யப்படுவதை இந்தியா தடைசெய்தது. ஆனாலும், நோய் தீர்க்கும் மருந்துக்கு விலங்குகளிடம் ஆய்வு செய்யப்படுவதைத் தடை செய்யவில்லை. எலி, சுண்டெலி, முயல், நாய், குரங்கு ஆகியவைதான் ஆய்வில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. தொற்றுநோய்கள் முதல் புற்றுநோய்கள் வரை பல்வேறு நோய்கள் இந்த விலங்குகளிடமும் மனிதர்களிடமும் ஒன்றுபோல் காணப்படுகின்றன. இவற்றின் சுவாசம், செரிமானம், உடலியக்கம், இனப்பெருக்கம், நோய்த் தடுப்பாற்றல் போன்றவற்றின் உடலியல்செயல்பாடுகள் மனிதர்களுடன் ஒத்துப்போகின்றன. ஆபத்தான மருந்துகளை முதலில் மனிதர்களிடம் பரிசோதிப்பது கடினம். இந்தக் காரணங்களால் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், சீனா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், கனடா, பிரிட்டன், ஜெர்மனி, தைவான், பிரேசில் ஆகிய 11 நாடுகள் மருந்து ஆய்வுக்கு விலங்குகளை அதிகமாகப் பயன்படுத்துகின்றன.

### அறிவியலாளர்களின் அறைகூவல்

‘உலகில் ஆண்டு தோறும் சுமார் 11.5 கோடி விலங்குகள் ஆய்வுக்கு உள்ளாகின்றன. ஆனால், புதிதாகத் தயாரிக்கப்படுவதோ 25 மருந்துகள்தான். ஒரு பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்க 12,000க்கும் அதிகமான விலங்குகளிடம் ஆராய வேண்டியுள்ளது. அப்போது கோடிக்கணக்கான விலங்குகள் உயிரிழக்கவும், வலி உள்ளிட்ட பல துன்பங்களை அனுபவிக்கவும் நேரிடுகிறது. ஆய்வுக்குப் பிறகு அவற்றின் வாழ்க்கைத் தரமும் குறைந்துவிடுகிறது. மனிதர்கள் வாழ விலங்குகளும் அவசியம். இப்பூவுலகில் மனிதர்களைப் போல விலங்குகளும் வாழப் பிறந்த உயிரினம்தான். அந்த உரிமையை மனிதர்கள் பறிப்பது நியாயமல்ல. எல்லாவற்றுக்கும் மேலாக, விலங்கின ஆய்வின்போது பதிவுசெய்யப்படும் முடிவுகளும் தரவுகளும் அந்த மருந்தை மனிதரிடம் பயன்படுத்தும் போது பெரும்பாலும் வித்தியாசப்படுகின்றன’ என்று பல்லுயிர்காக்கும் அறிவியலாளர்களும் குரல் கொடுக்கத் தொடங்கினர். அதனால், அரசு இப்போது புதிய முடிவை எடுத்துள்ளது. மருந்து ஆய்வுக்கு விலங்குகள் தவிர்த்த மாற்றுவழிகளைப் பரிந்துரைத்துள்ளது. விலங்குகள் இல்லாமலும் மருந்துகளை ஆய்வுசெய்ய முடியுமா? ‘முடியும்’ என்கின்றன நவீனத் தொழில்நுட்பங்கள்.




### வியப்பூட்டும் உறுப்புச் சில்லுகள்

கணினிச் சில்லுகளைக் (Computer chips) கேள்விப்பட்டிருப்பீர்கள். சில்லுத் தொழில்நுட்பத்தின் ஆகப் பெரிய மனிதப் பயன்பாட்டின் தொடக்கப்புள்ளி அது. தற்போது, ‘உறுப்புச் சில்லுகள்’ (Organs-on-chips) எனும் நவீனத் தொழில்நுட்பம் மருத்துவத் துறையில் புகுந்துள்ளது. மனித உறுப்புகளைப் பிரதிபலிக்கும் இந்தச் சில்லுகளுக்கு, ‘உயிரிணையாக்கிகள்’ (Biomimetics) என்று பெயர். ஆய்வாளர்கள், உடலுறுப்புச் செல்கள் இயங்கும் விதத்தையொட்டி, இயற்கை போன்று உறுப்புச் சில்லுகளை முப்பரிமாணங்களில் வடிவமைக்கின்றனர்.

ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் மட்டும் பதினைந்துக்கும் மேற்பட்ட உறுப்புச் சில்லுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. நுரையீரல், சிறுநீரகம், குடல், கல்லீரல், சருமம், மூளை, இதயம், எலும்பு மஜ்ஜை, கருப்பை, சூலகம் ஆகிய உறுப்புகளுக்கு உறுப்புச் சில்லுகள் தயார். இயற்கை செல்களுக்குள் நிகழ்வதுபோன்று இந்த உறுப்புச் சில்லுகளுக்குள் ரத்த ஓட்டமும் நிகழும். விலங்குகளின் உறுப்புகளுக்குப் பதிலாக இவற்றில் ஆய்வு செய்யலாம். ஆய்வுக்கு உள்ளாகும் மருந்தை உள்நுழைத்து விளைவுகளைப் பதிவுசெய்யலாம்.

ஒத்திசு உறுப்புகள் வருகை (Organoids) டச்சு அறிவியலாளர் ஹேன்ஸ் கிளவர்ஸ் (Hans Clevers) கண்டுபிடித்த இந்தத் தொழில்நுட்பம், செல் இயங்கியல் துறைக்குப் (Cell physiology) புதிய அறிமுகம். மனித ஸ்டெம் செல்களால் உருவாக்கப்பட்ட முப்பரிமாண உறுப்புகள் இவை. உடல் உறுப்புகளைப் போன்றே தோற்றமளிப்பவை. இவற்றின் செயல்பாடுகளும் உடலுக்குள் நிகழ்வதை ஒத்திருக்கின்றன. உதாரணமாக, ஸ்டெம் செல்களால் ஒரு நுரையீரல் மாதிரி வடிவம் உருவாக்கப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். அதனுள் ஒரே சமயத்தில் ரத்த ஓட்டமும் சுவாசமும் நிகழுமாறு வடிவமைக்கப்படுகிறது. ஆய்வு செய்யப்பட வேண்டிய மருந்தை இதற்குள் செலுத்தி, அடுத்து என்ன விளைவுகள் ஏற்படும், திசுவுக்குத் திசு இவை வேறுபடுகின்றனவா அல்லது ஒன்றுபோல் இருக்கின்றனவா, பக்கவிளைவுகள் ஏற்படுகின்றனவா என்பதை ஆய்வாளர்கள் பதிவுசெய்கின்றனர்.

முப்பரிமாண உயிரி அச்சுப்பிரதி (3D bio-printing) இதுவும் ஒத்திசு உறுப்பைப் போன்று செயல்படுவதுதான். ஆனாலும், இதில் சிறிய வித்தியாசம் இருக்கிறது. தனிப்பட்ட நபரின் ஸ்டெம் செல்களால் இது உருவாக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட மருந்து அந்த நபருக்குப் பயன்படுமா என்பதை இதன் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது.

அடுத்து, ஜெர்மனியில் ‘விட்ரோசெல் இயந்திரம்’ (VITROCELL machines) எனும் கருவியைக் கண்டுபிடித்துள்ளனர். இது ஒரு நுரையீரல் மாதிரி வடிவம். மூச்சுக் காற்றின் வழியாக ஒரு மருந்து உறிஞ்சப்படுமானால் (Inhalers) அது நுரையீரல்களில் என்ன செய்யும் என்பதைத் தெரிவிக்கும் கருவி இது. தவிர, மனித-நோயாளி உருப்போலிகள் (Human-patient simulators) எனும் கருவிகளும் இப்போது வந்துள்ளன. மருந்துகளின் செயல்பாடுகளை மருத்துவ மாணவர்களுக்குக் கற்றுத் தருவதற்கு விலங்குகளுக்குப் பதிலாக இந்தக் கருவிகள் பயன்படுகின்றன. நாளுக்கு நாள் மேம்பட்டு வரும் அறிவியல் யுகத்தில், இன்னும் பல புதிய கருவிகளும் தொழில்நுட்பங்களும் வரக்கூடும்.

சவால்கள் என்ன? மேற்சொன்ன நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டுமானால், இந்தியாவில் மருந்தியல் துறையில் வளர் ஊடகம் (Cell culture), பொருள் அறிவியல் (Material science) தொடர்பான மருத்துவக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும். செல் உயிரியல், மருந்தியல், மின்னணுவியல், கணினியியல் ஆகிய துறைகளில் அதிக நிபுணத்துவமும் அனுபவமும் மிக்கவர்களை உருவாக்க வேண்டும். அதேவேளை, இந்தப் பல்துறை நிபுணர்களை ஒன்றிணைக்க வேண்டும். அதுவரை தற்போதுள்ள நிபுணர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் தரப்பட வேண்டும். இந்தியாவில் மேற்கொள்ளப்படும் மருந்து ஆய்வுகளுக்குத் தேவையான பல வினைவேதிப்பொருள்களுக்கும் (Reagents), வளர் ஊடகப்பொருள்களுக்கும் வெளிநாடுகளை எதிர்நோக்கியுள்ளோம். இந்த நிலை மாற வேண்டும். மருந்து ஆய்வுகள் குறித்துச் சரியான வழிகாட்டு நெறிமுறைகளை அரசு செயல்படுத்த வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, ஆய்வின் தரத்தையும் முடிவையும் நிபுணர் குழு மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

காலைக்கதிர் Kalaikkathir

# நுவரெலியாவில் கிருமி தொற்றாளர் எண்ணிக்கை யாழில் அதிகரிப்பு

யாழில் நுரையீரல் மற்றும் இருதய 'வால்வு' ஆகியவற்றில் கிருமித் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது.

அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனையாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இவ்வாறு தொற்றுக்குள்ளானவர்களில் பெருமளவானோர் 25 வயதிற்கும் குறைந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த ஒருவருட காலத்தில், யாழ்ப்பாணத்தில் ஊசி மூலமான போதைப்பொருள்களை நுகர்ந்த 15 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் வைத்திருந்த இருவர் கைதாகினர்

உரிமம் இன்றி வைத்திருந்த போர் துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களுடன் இருவர் இரத்தினபுரி விடே அதிரடிப்படையினரால் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி கஹவத்த முகாமின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைதாகினர்.

இவர்களிடமிருந்து உரிமம் இன்றி வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 16 போர் துப்பாக்கி, 19 தோட்டாக்கள் மற்றும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட 16 போர் துப்பாக்கி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது 71வயதுடையதுடைய நபர் ஒருவரும் 41 வயதுடைய நபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளுக்காக சிறிபாகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

.(05)

# கால்நடை வளர்ப்பாளர்களுடன் தம்பலகாமத்தில் கலந்துரையாடல்




தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள பண்ணையாளர்களுடனான கலந்துரையாடல் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி,மேலதிக அரசாங்க அதிபர் ஜெ.எஸ்.அருள்ராஜ், மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன்(காணி), வனஜீவராசி திணைக்கள அதிகாரிகள், கால் நடை வைத்திய அதிகாரி என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கால் நடை வளர்ப்பாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன் தங்களது கோரிக்கைகளை கால் நடை வளர்ப்பாளர்கள் மாவட்ட செயலாளரிடம் முன்வைத்தனர்.

இதன்போது தம்பலகாமம் பகுதியில் 03.12.2023 ஆந் திகதி அன்று முதலை தாக்குதளுக்கு இலக்காகி உயிரிழந்த நபரின் குடும்பத்திற்கு முதற் கட்டமாக ஒரு லட்சம் ரூபா பெறுமதியான காசோலை மாவட்ட செயலாளரால் வழங்கி வைக்கப் பட்டது.

இதில் தம்பலகாமம் பகுதியை சேர்ந்த பண்ணையாளர்களின் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (05)

# கொலைக்குற்றம் நிரூபிக்கப்பட்ட இருவருக்கு மரண தண்டனை

நபர் ஒருவரைக் கொலை செய்த சம்பவம் தொடர்பில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட இருவருக்கு மத்திய மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது.

இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்ட கண்டி குருபெத்த பிரதேசத்தை சேர்ந்த டி. எம். சமன் குமார திஸாநாயக்க மற்றும் சமரகோன் பண்டார விஜேகோன் ஆகியோராவார்.

குற்றவாளிகளாகக் காணப்பட்ட இருவருக்கும் மரணதண்டனை விதித்த நீதிமன்றம், பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (05)

# குழந்தைகளைப் பாடசாலையில் சேர்க்கும் எண்ணிக்கை வீழ்ச்சி

நாட்டில் குழந்தைப்பேறுகள் குறைவடைந்துள்ளமையால் 5 வயதை கடந்த குழந்தைகளை பாடசாலையில் சேர்க்கும் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

தற்போது சுமார் 292,000 குழந்தைகள் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பத்து வருடங்களுக்கு முன்னர் 340,000 பிள்ளைகள் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சின் செலவு தொடர்பான வரவு செலவுத் திட்ட குழு விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைத் தெரிவித்தார். (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்தும்முல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Roty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

## பங்குதந்தையால் தாக்கப்பட்ட சிறுமி யாழில் வைத்தியசாலையில் சேர்ப்பு

யாழ். சாவகச்சேரியில், ஞாயிறு ஆராதனைக்குச் செல்லவில்லை எனக் கூறி சிறுமி ஒருவர் பங்குத் தந்தையால் தாக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றின் பங்குத் தந்தையே இவ்வாறு சிறுமி மீது தாக்குதல் நடத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## கிரிக்கெட் நிறுவன இடைக்கால நிர்வாகம்: மனு மீதான விசாரணை 13 ஆம் திகதிக்கு

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு இடைக்கால நிர்வாகத்தை நியமிப்பதற்கு முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொரான் ரணசிங்க எடுத்த தீர்மானத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்வரும் 13 ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, புதிய விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ சார்பில் ஆஜரான சட்டத்தரணி, இதனுடன் சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் தமது கட்சிக்காரரின் நிலைப்பாட்டை அறிவிப்பதற்கு கால அவகாசம் தேவை என நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

அதன்படி வழக்கு விசாரணை இம்மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் அன்றைய தினம் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது என புதிய விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நீதிமன்றத்துக்கு உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளுடன் மூவர் கைது

கல்கிரியாகம, கல்கமுவ மற்றும் நிக்கவரெட்டிய பகுதிகளில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளுடன் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிரியாகம பிரதேசத்தில் இரண்டு உள்நாட்டு துப்பாக்கிகளுடன் 45 வயதுடைய நபரொருவரும் கல்கமுவ மற்றும் நிக்கவரெட்டிய பிரதேசத்தில் உள்நாட்டு துப்பாக்கிகளுடன் இரண்டு சந்தேக நபர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதிகளின் பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



## 58 வயது சகோதரனை அடித்துகொன்று உடலை ஓடையில் வீசி எரித்தவர் கைது

58 வயதான தனது சகோதரனை அடித்துக் கொன்று அவரது உடலை ஓடையில் போட்டு எரித்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என அக்குரஸ்ஸ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அக்குரஸ்ஸ, ஹேனேகம, பலபத்த, உடுகமவத்த ஹேன பிரதேசத்தில் வசித்த 65 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரது வீடுகளும் ஒரே காணியில் உயரமான மலை உச்சியில் அமைக்கப்பட்டுள்ளதுடன், இறந்தவரின் நிரந்தர வசிப்பிடம் தெஹியத்தகண்டிய பிரதேசத்தில் உள்ளமையும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

உயிரிழந்த நபர் கடந்த ஒக்ரோபர் 28ஆம் திகதி வீட்டுக்கு வருவதாகக் கூறிய போதும் அவர் வரவில்லை என அவரது மனைவி பொலிஸில் செய்த முறைப்பாட்டின்படி பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் உயிரிந்தவரின் சகோதரர் கைது செய்யப்பட்டார். இதனையடுத்து பொலிஸார் சந்தேக நபரிடம் மேற்கொண்ட தீவிர விசாரணையின்போது இந்த தகவல்கள் வெளியாகின. (05)

## காணிதகராறின்போது சகோதரியை கத்தியால் தாக்கிக் காயப்படுத்திய கான்ஸ்டபிள் கைது

காணித் தகராறு காரணமாக ஏற்பட்ட வாக்குவாதத்தில் தனது சகோதரியை கத்தியால் தாக்கிக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பல்லம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுரைச்சோலை பொலிஸில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பள்ளம, திம்பிரிகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த தனது சகோதரியுடன் ஏற்பட்ட காணித் தகராறு காரணமாக பொலிஸ் கான்ஸ்டபிளால் அவர் தாக்கப்பட்டுக் காயமடைந்துள்ளார் எனப் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் கான்ஸ்டபிளால் தாக்கப்பட்ட அவரது சகோதரி சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (05)

## களனிப் பல்கலைக்கழகத்தின் 4 மாணவர்களுக்கு வகுப்பு தடை

பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டில் நான்கு மாணவர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என களனி பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதேவேளை, களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனைய பீடங்கள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன. அதன்படி, மருத்துவ பீட விடுதிகள் தவிர்ந்த பல்கலைக்கழகத்தின் அனைத்து விடுதிகளும் மூடப்பட்டிருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

## நெதர்லாந்து....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

ஆம் ஆண்டில் ஒல்லாந்தர் கண்டி அரச மாளிகையை சுற்றிவளைத்த போது கிழக்கிந்திய ஒல்லாந்து நிறுவனத்தினால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

பிற்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் உறுதிப்பாடுகளை மையப்படுத்தி மேற்படி தொல்லியல் பொருட்களை இலங்கைக்குமீளக்கையளிக்குமாறு இராஜதந்திர அடிப்படையில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய இரு நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளை பலப்படுத்தும் விசேட நிகழ்வாக மேற்படி 06 தொல்லியல் பொருட்களும்உத்தியோகபூர்வமான இலங்கைக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த தொல்லியல் பொருட்கள் டிசம்பர் 05 முதல் மறு அறிவித்தல் வரையில் கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் மக்கள் பாவனைக்காக வைக்கப்படும். இந்த விசேட நிகழ்வை அடையாளப்படுத்தும் வகையில் விசேட முத்திரையொன்றும் வெளியிடப்பட்டது.

இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் பொனி ஹோபாஇ ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டாரஇ தேசிய நூதனசாலைத் திணைக்களப் பணிப்பாளர் சுஜானி கஸ்தூரியராச்சி உள்ளிட்டவர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## நீதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்னைப் படுகொலை செய்ய முயற்சி செய்தவர்கள் மீது பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

முதலில் அந்த வழக்கை நான் தாக்கல் செய்யவில்லை. அது குறித்து நான் முறைப்பாடு கூடச் செய்யவில்லை.

கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேகநபர்களும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை எனவும்இ அவர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டாமென நான் தொடக்கத்திலேயே குறிபிட்டிருந்தேன்.

அவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை அல்லது பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி அவர்கள் மீது வழக்குத் தொடரப்படவுமில்லை.

அவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர்இ அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்களை பிணையில் விடுவிக்க நான் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

அதன் பின்னர்இ சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்தபோதும் கூடஇ எனது சட்டத்தரணிகள் ஊடாக இவர்களுக்கு பிணை வழங்குவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை எனக் கூறியிருந்தேன். தற்போதும் அந்த ஐந்து பேரும் பிணையில் வெளியேதான் இருக்கின்றனர்.

எனவே அவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை. தடுத்து வைக்கப்படவும் இல்லை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தக் கூடாது என நான் வெளிப்படையாகக் கூறியுள்ளேன் என்றார்.

முன்னதாகஇ சுமந்திரனைக் கொல்ல புலம்பெயர் தமிழர்கள் பணம் கொடுத்தனர் என்றும் அதனைப் படையினரே தடுத்தனர் என்றும் தெரிவித்த நீதி அமைச்சர்இ அவரது பாதுகாப்புக்கு என்றால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தலாம் மற்றவர்களுக்கு என்றால்அதனைப்பயன்படுத்தக்கூடாதுஎன்றுதெரிவிக்கும்சுமந்திரன்இ தனது கொலை வழக்குச் சந்தேகநபர்களை விடுவிக்கமாறு கோரிக்கை விடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார்.





JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
134, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# க.பொ.த. சாதாரண தரத்தை பூர்த்தி செய்த மாணவர்களுக்குத் தொழிற்கல்வி வாய்ப்பு

## சமன் ரூபசிங்க தெரிவிப்பு



கல்விப் பொதுத் தரப் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் சித்தியடையாத இரு பிரிவினரும் இலங்கையில் தொழிற்கல்வியைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள் என மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதிவு அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவம் தொடர்பான பணிப்பாளர் சமன் ரூபசிங்க தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் 525 பாடசாலைகளில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும், தொழிற்பயிற்சி நிலையத்தால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதன் பின்னர், க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய சகல மாணவர்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தொழில் சந்தையை இலக்காகக் கொண்டு இந்த பாடநெறிகள் அனைத்தும் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட '101 உரையாடல்' நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சமன் ரூபசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்தத்திட்டத்தின் பிரகாரம் முதலாம் ஆண்டு தொழிற்கல்வியும், இரண்டாம் ஆண்டில், தொழில் பயிற்சி நிறுவனமொன்றின் ஊடாக என்.வி.கியு. தரச் சான்றிதழ் வழங்கப்படும். என்.வி.கியு. 4 சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னர் டிப்ளோமா, உயர் டிப்ளோமா மற்றும் பட்டப் பின் படிப்பு வரை கற்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டே உயர்தரத்தில் கற்க வாய்ப்புக் கிடைக்கிறது. ஆனால் சாதாரண தரத்தில் சித்தி பெறாத மாணவர்கள், கல்விச் செயல்பாட்டில் இருந்து விலக்கிச் செல்கின்றனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில், எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மாணவர் சமூகத்தை தயார்படுத்தும் வகையில், பாடசாலையின் ஊடாக மாணவர்களை தொழிற்கல்விக்கு வழிநடத்துவதன் அவசியத்தை உணர்ந்து '13 வருட தொடர்ச்சியான கல்வித் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டது என்று சமன் ரூபசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த சமன் ரூபசிங்க -இத்திட்டத்தின் மூலம் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களும் பரீட்சையில் சித்தியடைந்தாலும் இல்லாவிட்டாலும் தொழிற்கல்விக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் தொழில்வாண்மையாளர்களாக வெளிநாடு செல்ல விரும்பும் பலர், தொழில்சார் கல்விக்கு விண்ணப்பிப்பதற்கான வாய்ப்புகள் குறித்து கேட்கின்றனர். அவர்கள் தேவையான மொழி அறிவைப் பெறுவதற்கு குறுகிய காலப் பாடநெறிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், மோட்டார் மெக்கானிக், வெல்டிங் டெக்னீஷியன், விவசாய உதவியாளர், ஹோட்டல்துறை போன்ற எந்தத்துறையிலும் கணினி அறிவு பெற்றிருப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இது தொழிற்துறைத் தகைமையாக இல்லாத போதும் மேலதிக தகுதியாக இது முக்கியமானது.

சாதாரண தரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருந்தாலும் இல்லாவிட்டாலும் தொழிற்கல்வி கற்க முடிவு செய்யும் மற்றவர்களும் உள்ளனர். இவர்களுக்கான தொழிற்கல்வித் திட்டங்கள் இலங்கையில் 525 தொழிற்பயிற்சி நிலையங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்தத் திட்டத்திற்கு விண்ணப்பிக்க சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகும் வரை காத்திருக்க வேண்டியதில்லை. 13 வருட தொடர்ச்சியான கல்வித் திட்டத்தின் மூலம், அவர்கள் பாடசாலைகளில் இருந்தே தொழிற்கல்வியைத் தொடரும் திறனைப் பெற்றுள்ளனர். இதற்கான விண்ணப்பங்கள் பத்திரிகை விளம்பரங்கள் மூலம் அறிவிக்கப்படும்.

இந்தத் தொழில்முறை பாடநெறிகள் யாவும் தொழிற் சந்தையை இலக்காக வைத்தே வடிவமைக்கப்பட்டுள்ளன. தேசிய தொழில்தகுதி சான்றிதழ் திட்டத்தின் மூலம், கடந்த 5-6 ஆண்டுகளில் மிகவும் திறமையான தொழில்சார் நிபுணர்களை உருவாக்க முடிந்தது. அதனால்தான் மாணவர்கள் மத்தியில் இந்தத் திட்டம் பிரபலமாகியுள்ளது.

என்விகியு 3 மற்றும் என்விகியு 4 சான்றிதழ் வழங்கும் பயிற்சிகளுக்கே நாம் மாணவர்களை தேர்ந்தெடுக்கிறோம். அதன் டிப்ளோமா, உயர் டிப்ளோமா, பட்டப் பின் படிப்பு வரை கற்க வாய்ப்பும் உள்ளது. என்.வி.கியு. 6 சான்றிதழைப் பெற்ற ஒருவர் வெளிநாடுகளில் பட்டப் பின் படிப்புகளுக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு உள்ளது. மோட்டார் பொறியியல், வெல்டிங், விவசாயம் மற்றும் ஹோட்டல் தொழில் உள்ளிட்ட 26 துறை களை உள்ளடக்கி பாடநெறிகள் நடைபெறுகின்றன.

மேலும், உயர் தரத்திற்குப் பிறகு பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்கள் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட 1400 தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் மூலம் தங்களுக்கு விருப்பமான தொழில் பயிற்சியைத் தொடர வாய்ப்பு உள்ளது. இது தொடர்பான தகவல்களை இணையத்தளத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

மூன்றாம் நிலை கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதிவு அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவப் பணிப்பாளர் சமன் ரூபசிங்கவுடனான உரையாடல் தொடர்பான காணொளிகளை இந்த இணைப்பின் மூலம் பார்வையிடலாம்.

வன் ஓ வன் உரையாடல் மூலம் வெளியிடப்படும் புதிய தகவல்களைப் பெற, கீழ்வரும் இணைப்பின் மூலம் வட்ஸ் அப் குழுவில் இணைந்து கொள்ளலாம். (05)

# நானு ஓயாவில் வீதி தாழிறங்கியது சாரதிகளுக்கு பொலிஸ் எச்சரிக்கை







நுவரெலியா மாவட்டம் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் கடும் மழையுடன்கூடிய சீரற்ற காலநிலை நிலவிவருகின்றது. இந்நிலையிலேயே மேற்படி வீதி தாழிறங்கியுள்ளது.

நுவரெலியா - ஹற்றன் ஏ7 பிரதான வீதியின் நானுஓயா சந்திக்கு அருகில் வீதி தாழிறங்கியுள்ளதால் ஒரு வழி போக்குவரத்து இடம்பெற்று வருவதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் குறித்த பகுதியில் சிறிய அளவிலான வெடிப்புக்கள் ஏற்பட்டிருந்த நிலையிலே தொடர்ந்துபெய்தகடும்மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் பாரிய அளவில் வீதி தாழிறக்க அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

தற்போது குறித்த பகுதி ஒரு வழிப்போக்குவரத்து இடம்பெற்று வருவதால் சாரதிகள் அவதானத்துடன் வாகனத்தைச் செலுத்துமாறு நானுஓயா போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனவே, குறித்த இடத்தில் விபத்து ஏற்படுவதற்கு முன் உரிய அதிகாரிகள் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும் என சாரதிகளும், பொது மக்களும்கோரிக்கை விடுத்ததையடுத்துதாழிறங்கியுள்ள குறித்த வீதிப்பகுதி விரைவில் புனரமைக்கப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், வீதி தாழி றக்கியுள்ளமை குறித்து அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மூலம் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளின் ஆலோசனைகளை பெற்று இதற்கான காரணத்தைக் கண்டறிவதற்கான ஆய்வுகளும் இடம்பெற்றுவருவதோடு, குறித்த பகுதியை மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் உடனடியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், குறித்த வீதியில் ஏற்பட்பட்ட தாழிறக்கம் காரணமாக வீதியில் ஏற்படும் ஆபத்து நிலைமை குறித்து அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அவதானத்துடன் உள்ளது எனவும் வீதி தாழிறக்கம் காரணமாகப் பாரிய பாதிப்புக்கள் ஏற்படாது உறுதிப்படுத்தியுள்ளனர். (05)

# இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிய விபத்தில் ஒருவர் சாவு

## மனைவி, பிள்ளை காயமடைந்து வைத்தியசாலையில்

அநுராதபுரம் - பாதெனிய வீதியில் அம்பன்பொல பஸ் நிலையத்துக்கு அருகில் திங்கட்கிழமை இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மஹாவ பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடையவராவார்.

இவர் தனது மனைவி மற்றும் பிள்ளையுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது எதிரில் வந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் தூக்கி வீசப்பட்டு எதிர்திசையில் வந்த காரில் மோதி காயமடைந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த மூவரும் அம்பன்பொல வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட பின்னர் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். அவரது மனைவி மற்றும்பிள்ளை மேலதிக சிகிச்சைக்காக குருணாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த மற்றைய மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் அம்பன்பொல வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். (05)

# விசாரணைகளை மேற்கொள்ள தவறிய இரு பொலிஸார் பணி இடைநிறுத்தம்

கடந்த நவம்பர் மாதம் 30 ஆம் திகதி நீர்கொழும்பு வர்த்தக நிலையமொன்றில் இடம்பெற்ற திருட்டு சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளத் தவறிய இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டவர்கள் நாரம்மல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களாவர்.

குளியாப்பிட்டி பொலிஸ் அத்தியட்சகரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த நபர்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். (05)

# புதுமுறிப்பு குளத்திலிருந்து மீன்கள் வெளியேறாமல் தடுப்பு வலைகள்



வான்பாயும் போது குளத்திலிருந்து மீன்கள் வெளியேறாமல் தடுக்கும் வகையில் தடுப்பு வலைகள் அமைக்கும் பணிகள் புதுமுறிப்புக் குளத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் பருவமழைக்கு குளம் நிரம்பி வான்பாயும்போதும் பெருமளவு மீன்கள் குளத்திலிருந்து வெளியேறி விடுகின்றன. இதன்காரணமாக நன்னீர் மீன் பிடி தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தமையை கருத்தில் எடுத்து வான்கட்டு பகுதியில் தடுப்பு வலைகள் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பிராந்திய தேசிய நீர் உயிரினச்செய்கை அதிகாரசபையின் பணிப்பாளர் குமாரகுலசிங்கம் சங்கீதன் மற்றும் அவர்களது குழுவினர், புதுமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் இணைந்து இந்தப் பணியை மேற்கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# இரண்டு யானைகளை கொன்ற குற்றச்சாட்டில் பொலிஸில் சரணடைந்த கணவனுக்கு மறியல்

## மனைவி பிணையில் விடுவிப்பு

தெவநுவரவில் தனியார் காணி ஒன்றில் பாய்ச்சப்பட்டிருந்த மின்சாரம் தாக்கியதில் இரண்டு காட்டு யானைகள் உயிரிழந்த குற்றச்சாட்டில், கருவலகஸ்வெளபொலிஸில்சரணடைந்த ஒருவரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் நீதிவான் உத்தரவிட்டார்.

அவரது மனைவியை இரண்டு லட்சம் ரூபா பிணையில் விடுவிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. கருவலகஸ்வெள தப்போவ தெவநுவர பகுதியைச் சேர்ந்த ஜயசூரிய முதியன்சேலாகே குமாரசிங்க ஜயசூரிய என்ற 53 வயதுடைய நபரே விளக்கமறியலில் வைக்கப்படடுள்ளார்.

சந்தேக நபரின் மனைவியை அவரது இரண்டு சிறு பிள்ளைகளையும் கருத்தில் கொண்டு இரண்டு லட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (05)

# ஹோட்டல் விருந்துபசாரத்தில் மோதல் ; ஒருவர் உயிரிழப்பு

ஜா - எல பிரதேசத்தில் ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற விருந்துபசார நிகழ்வொன்றில் ஏற்பட்ட மோதலில் நீச்சல் தடாகத்தில் வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் ஜா - எல பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபராவார்.

இவர் குறித்த நிகழ்வில் நபரொருவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட நிலையில் வாக்குவாதம் எல்லை மீறி இருவருக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் சந்தேக நபர் இவரை நீச்சல் தடாகத்தில் தள்ளிவிட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவத்துடன்தொடர்புடைய சந்தேக நபர் தலைமறைவாக உள்ள நிலையில் அவரைக் கைதுசெய்யும் நடவடிக்கையில் ஜா - எல பொலிஸார் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.12.2023இல் வெளியிடப்பெற்றது.